முருகப்பெருமான் துணை

**மகான் மங்கையர்க்கரசியார் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.03.2023**, வியாழக்கிழமை

1. தவசியே கலியினில் அவதரித்து
   தன்னார்வ சேவை விதைத்து
   அவனியை காக்கும் வண்ணம்
   அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது சேல் திங்கள்
   வரங்களென நவதிகதி குருவாரம்
   வழங்குவேன் அனுகூல ஆசி
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 09 ம் நாள், 23.03.2023, வியாழக்கிழமை)
3. ஆசிதனை மங்கையர்க்கரசியாரும்
   அகிலமே வளமுற உரைப்பேன்
   பேசிடவே ஞானியர்கள் காட்டும்
   பேதமற்றும் சன்மார்க்கநெறி
4. நெறிவழி உலகமக்களெல்லாம்
   நேர்மைபட ஏற்று வணங்கி
   அறியாமை வென்று வாழ்வில்
   அனைத்து ஞானமும் அருளவேண்டி
5. வேண்டித் தொடர்ந்து வர
   விழாவெனும் முழுமதி பூசைதோறும்
   தொண்டோடு கலந்து பணிந்து
   தொடர் சேவை ஆற்றி வருக
6. வருகவே அறுபத்து மூவர் போல்
   வாழுகின்ற ஞானியர் போலே
   தருமவான்கள் தன்னார்வத் தொண்டுவழி
   தரணியெங்கும் ஞானவான்கள் பெருகி
7. பெருகியே இந்த வையகம்
   பெரும் மாற்றம் தனை அடையும்
   முருகப்பெருமான் வழிபாடெனும்
   முழுமைதரும் வழி பாடு நிலைத்து
8. நிலைத்து மனித வர்க்கமே
   நிலமதனில் அனைவரும் சமமென
   தழைத்துமே ஒரே குலமென
   தணிகாசலனே வணங்கும் கடவுள் என
9. என பேதமிலா நிலை கூடி
   எங்கும் சித்தி பெருகியே
   ஞானபண்டிதன் வெளிப்படவே
   ஞானிகள் கூட்டம் மிகுந்து

10. மிகுந்துமே கலித்துன்பமில்லா
முழுமைபட பாதுகாப்பு நிரம்பி
தகுந்த ஞானவான்கள் தலைமை
தரணியெங்கும் பரவிட இனிதே

11. இனிதே ஞான ஆட்சி
இணையில்லா ஞானிகள் ஆட்சி
கனிவேலவன் துணைபட நடக்கும்
கண்டுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–